ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

மதுரகவி தாசன் இயற்றிய

# பெரியாழ்வார் பெண்பிள்ளை

வாழி சூடிக் கொடுத்த சுடர்கொடி
வாழி பாடிக் கொடுத்த பைங்கிளி
வாழி அரங்கனுக்கே அமைந்த அணங்கு
வாழி பெரியாழ்வார் பெண்பிள்ளையே க

ஆண்டாள் அரங்கனை அமைவுடை நாயகியாய்
ஆண்டாள் உலகை அனைத்தும் உய்ந்திட
ஆண்டாள் அடியாரையும் அல்லாரையும் என்னையும்
ஆண்டாள் பெரியாழ்வார் பெண்பிள்ளையே உ

கோதை பிறந்தாள் ஆழ்வார் திருமகளாய்
கோதை வளர்ந்தாள் அரங்கனுக்கே உரியவளாய்
கோதை விரித்தாள் வேதத்தை மாலைகளாய்
கோதை பெரியாழ்வார் பெண்பிள்ளையே ங

பிறந்தாள் ஆழ்வார் பெண்ணாய், ஆற்றாமையால்
விரைந்தாள் விமலனடி அடைய, அமைந்தாள்
சிறந்த துணையாய் அரங்கனுக்கே, சீர்
நிறைந்த பெரியாழ்வார் பெண்பிள்ளையே ச

அன்னை திருத்துழாய் அத்தன் பெரியாழ்வார்
அண்ணன் குலமுனிவன் அண்ணலோ அரங்கன்
தன்னிகரில்லாத் தோன்றல் எனக்கு எளியள்
என்னுக்கு பெரியாழ்வார் பெண்பிள்ளையே ரு

முன்னொரு காலம் மூவுலகும் இருள
இன்னொரு சொல் வேண்டா வண்ணம், தான்
சொன்ன சொல்லால் சுடரொளி ஈந்த, புகழ்
மன்னிய பெரியாழ்வார் பெண்பிள்ளையே சா

மணம் தான் கொடுத்தாள் பூமாலைகளுக்கு
குணம் தான் உரைத்தாள் பாமாலைகளில்
மனந்தான் கொடுத்தாள் அரங்கன் மலரடிக்கு
இணையில்லா பெரியாழ்வார் பெண்பிள்ளையே எ

கருணை அங்கடல் காகுத்தன் தன்னிலும்
கருணை மிக்கதோர் கனிந்த நெஞ்சால்
கருணையே வடிவாகி வந்த எம் மிக்க
கருணை பெரியாழ்வார் பெண்பிள்ளையே அ

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

பாவை பாடினாள் பாவை முப்பதும்
பாவை தொகுத்தாள் திருமொழி திரட்டும்
பூவைவண்ணனை நாமும் அடையப் பாடிய எம்
பாவை பெரியாழ்வார் பெண்பிள்ளையே ௯

பெரியாழ்வார் பெண்ணாய்ப் பிறந்த கோதையை
பெரியனான கண்ணனையே மணந்த மாதை
தெரியானான காஞ்சியின் அனந்தன் வேங்கடார்யன்
தெரித்தெழுதிய மாலையைத் திருவடியில் வைத்தானே க0

---